சுருக்கம்

தமிழ் வளர்ச்சித் துறை – 2021–2022–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பான, பழந்தமிழ் இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் மற்றும் சிறார் இலக்கியங்கள் ஒலி நூல்களாக (Audio Book) வெளியிடுதல் – திட்டத்திற்கு ரூ.10,00,000/–ம் வழங்க நிர்வாக அனுமதி அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ2–2)த் துறை

அரசாணை (நிலை) எண்.147

நாள் 12.11.2021
பிலவ, ஐப்பசி –26
திருவள்ளுவர் ஆண்டு – 2052

படிக்க:–

1. 2021–2022–ஆம் ஆண்டுக்கான சட்டமன்றப் பேரவை அறிவிப்பு எண்.14.
2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித ந.க.எண்.9079/வ.செ.2/2021, நாள் 11.10.2021.

========

ஆணை:–

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 31.8.2021 அன்று நடைபெற்ற தமிழ் வளர்ச்சித் துறையின் 2021–2022–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை எண்.46–இல், மாண்புமிகு அமைச்சர் (தொழில் துறை) அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது :–

"பழந்தமிழ் இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் மற்றும் சிறார் இலக்கியங்கள் ஒலி நூல்களாக (Audio Book) வெளியிடப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்."

2) மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் பழந்தமிழ் இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் மற்றும் சிறார் இலக்கியங்களை ஒலி நூல்களாக (Audio Book) வெளியிட, முதலில் ஒலி நூல்களாக ஆக்குவதற்கு உரிய நூல்களைத் தேர்வு செய்ய வல்லுநர் குழு ஒன்றை அமைத்துக்கொள்ள தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளருக்கு அனுமதி வழங்கப்பெறலாம் என்றும், மேலும் தெரிவு செய்யப்பட்ட இலக்கியங்களுக்கு தமிழ் வளர்ச்சி இயக்குநரின் இசைவினைப் பெறவேண்டும் எனவும், ஒலி வடிவில் பதிவு செய்யும் திறனர்களை ஆசிரியர்கள், மாணவர்களில் இருந்தே தேர்வு செய்யலாம் என்றும், ஒலிப்பதிவு செய்தல், குறுவட்டு / ஒலிப்பேழை தயாரித்தல், குரல் தருவோர் மதிப்பூதியம் உள்ளிட்டவற்றிற்கு ஏற்ப ரூபாய் 10 இலட்சத்தில் எத்தனை நூல்கள் வெளியிட இயலுமோ அவற்றைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிடும் என்றும் தெரிவித்துள்ளார்.

3) மேலும், இலக்கியங்கள் ஒலி வடிவில் பதிவு செய்வதற்கான திறனாளர்களைத் தெரிவு செய்வதற்கும் பதிவு செய்யப்பட்ட ஒலிப் பதிவுகளை தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளரால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் ஏற்பினைப் பெற்று இறுதி செய்யப்பட வேண்டும் எனவும், ஒலிப்பதிவு செய்தல், மதிப்பூதியம் வழங்குதல் குறுவட்டு/ஒலிப்பேழை தயாரித்தல் ஆகியன உரிய விதிமுறைகளைப் பின்பற்றி

மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்து ஆணையிடப்பெறலாம் என்றும், இந்த ஒலிப்பதிவு நூல்களை உலகத் தமிழர்கள் அனைவருக்கும் கொண்டு சேர்க்கும் வகையில் இணையத்தில் வெளியிடப்படும் வகையிலும் ஆணையிடப் பெறலாம் என்றும் தெரிவித்துள்ளதுடன், இத்திட்டத்திற்கென தொடராச் செலவினமாக 2021–2022–ம் நிதியாண்டிற்கு ரூ.10 இலட்சம் வழங்கப்பெறலாம் என்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4) அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவின் அடிப்படையில் பின்வருமாறு அரசு ஆணையிடுகிறது:–

i). பழந்தமிழ் இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் மற்றும் சிறார் இலக்கியங்கள் ஒலி நூல்களாக (Audio Book) ரூ.10,00,000/–ல் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) வெளியிட நிருவாக அனுமதி அளிக்கப்படுகிறது.

ii). தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மூலம் பழந்தமிழ் இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் மற்றும் சிறார் இலக்கியங்களை ஒலி நூல்களாக (Audio Books) வெளியிட முதலில் ஒலி நூல்களாக்குவதற்கு உரிய நூல்களைத் தேர்வு செய்ய வல்லுநர் குழு ஒன்றை அமைத்துக்கொள்ள தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. மேலும், தெரிவு செய்யப்பட்ட இலக்கியங்களுக்கு தமிழ் வளர்ச்சி இயக்குநரின் இசைவினைப் பெறவேண்டும் என தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

iii). வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, நூல்கள் தேர்வு செய்யப்பட்டு, தமிழ் வளர்ச்சி இயக்குநரின் ஒப்புதல் பெற்ற உடன் உரிய கருத்துருவின் மூலம் நிதி ஒப்பளிப்பு கோரிப் பெறவும், மேலும் நிதி ஒப்பளிப்பு கோர காலதாமதம் ஏற்படின் 2022–2023 வரவு–செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு பெற அனுமதி அளிக்கப்படுகிறது.

5) இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.49453/ நிதி(தவ(ம)செ)/2021, நாள் 12.11.2021–ன் வாயிலாக பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர் (மு.கூ.பொ)
தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
பதிவாளர் (பொ), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
மாவட்ட கருவூல அலுவலர், தஞ்சாவூர்.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–9/18.
நகல்:–
மாண்புமிகு அமைச்சர் (தொழில்துறை) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
செயலாளர் அவர்களின் முதன்மை தனிச்செயலர்,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, சென்னை–9.
நிதி (தவ(ம)செ)த் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.